செய்தி வெளியீடு எண்:336 நாள் : 11.07.2016

# மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் தலைமைச்செயலகத்தில் ஆவின் பால் மற்றும் பால்பொருட்கள் விற்பனை குறித்து ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி இன்று (11.07.2016) சென்னை தலைமைச் செயலகத்தில் ஆவின் பால் மற்றும் பால்பொருட்கள் விற்பனை குறித்து மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு எஸ்.பி. சண்முகநாதன் அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தலைவர் திரு அ. மில்லர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலர்(பொறுப்பு) திரு ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., பால்வளத்துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் திரு சுனீல்பாலீவால், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி செயல்படுத்தப்பட்ட பல்வேறு பால்வளத்திட்டங்களின் பயனாக பால் கையாளும் திறன் நாளொன்றுக்கு 23 லட்சம் லிட்டர் என்ற அளவிலிருந்து நாளொன்றுக்கு 31 லட்சம் லிட்டர் என்று அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக, தற்பொழுது ஆவின் நிறுவனம் நாளொன்றுக்கு சுமார் 31 லட்சம் லிட்டர் என்ற அளவில் பால் கொள்முதல் செய்து வருகிறது. இதனைத் தொடர்ந்து பால் மற்றும் பால்பொருட்களின் விற்பனையை அதிகரிக்க எடுக்கப்படவேண்டிய பல்வேறு வியாபார யுக்திகள் குறித்து விரிவாக இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மேலும், நுகர்வோர்கள் தங்களுக்குத் தேவையான பால் அட்டைகளை அடையாளச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் அளித்து ஆவின் வட்டார அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாக ஆவின் பால் வாங்குவோருக்கு வசதியாக ஆவின் 5 லிட்டர் பாக்கெட்டுகளில் நிலைபடுத்திய பால் விற்பனை செய்து வருகிறது. சமையல் கலைஞர்கள் கல்யாணம் மற்றும் விசேஷங்களுக்கு 5 லிட்டர் பால் பாக்கெட்டுகளில் நிலைபடுத்திய பாலை மொத்த

விற்பனையில் பெற்றுக்கொள்ளலாம். சமையல் கலைஞர்கள் ஆவின் பாலை மொத்தமாக ஆர்டர் செய்யும்போது அவர்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு அதிகபட்ச விற்பனை விலையிலிருந்து (MRP) ரூபாய் 1/– சிறப்புத் தள்ளுபடியாக வழங்குகிறது. ஆவின் நிறுவனம் சென்னை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நாளொன்றுக்கு 11.50 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்து வருகிறது.

ஆவின் நிறுவனம் தற்பொழுது சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சுமார் 1089 ஆவின் விற்பனை நிலையங்கள் மற்றும் தனியார் உரிமம் பெற்ற சில்லறை விற்பனை கடைகளில் ஆவின் பால் விற்பனை செய்து வருகிறது. மேலும், சுமார் 760ஆவின் விற்பனை நிலையம் மற்றும் ஆவின் உரிமம் பெற்ற தனியார் சில்லறை விற்பனை கடைகளில் ஆவின் பால் மற்றும் ஆவின் பால்பொருட்கள் விற்பனை செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆவின் பால் மொத்தமாக ஆர்டர் செய்ய விரும்பும் நிறுவனங்கள் 9445530503 என்ற எண்ணில் தொடர்புகொண்டு விபரங்களை அறிந்துகொள்ளலாம்.

நுகர்வோர்கள் தங்கள் ஆலோசனையைத் தெரிவிக்க ஆவின் 24 மணி நேர நுகர்வோர் நலன் மற்றும் சேவை மையத்தை 1800 425 3300 (இலவச சேவை) 23464578 என்ற இலவச எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

இந்த ஆய்வுக்கூட்டத்தின்போது ஆவின் இணை நிர்வாக இயக்குநர் திருமதி லீலா அலெக்ஸ், பொதுமேலாளர்(விற்பனை) திரு எஸ்.கே. கதிர்வேலு மற்றும் உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**